Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

மலர் 13
தபால் பெட்டி எண்; 49
போன் 389
தேசிய தினசரி
இதழ் 296

சாதாரண கார்த்திகை 21 டிசம்பர் 18 செவ்வாய்க்கிழமை (7-12-71)

WOLSELEY
"வூல்சிலி 2"
நீர் இறைக்கும் யந்திரங்கள்
உபகரணங்களுடன்
மலிவான விலையில் கிடைக்குமிடம்
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1 ஸ்ரான்லி றேட்
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

# வங்காள அரசை இந்தியா முறைப்படி அங்கீகரித்தது

## கி. வங்கத்தில் பாக். ராணுவம் பின்வாங்குகிறதாம்

## மேற்கில் கடும் சண்டை நீடிக்கின்றது

## ஐ. நா. வில் மீண்டும் ரஷ்யா 'வீட்டோ'

புதுடில்லி, டிசம்பர் 6

**வங்காளதேச அரசாங்கத்தை இந்திய அரசு அங்கீகரித்துவிட்டது**

**விண்ணைப் பிளக்கும் கரகோஷத்துக்கிடையில் இத்தகவலை இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி இன்று இந்திய ஆட்சிமன்றத்தில் அறிவித்தார்**

**இதேவேளையில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் வெடித்துள்ள போரை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்று கூறி எட்டு நாடுகள் ஐ. நா. பந்தோபஸ்துச்சபையில் கொண்டுவந்த தீர்மானம் ஒன்றை சோவியத் யூனியன் தன் 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தி ரத்துச்செய்துள்ளது**

**கிழக்கு வங்காளத்தில் மேலும் பெரும் பகுதிகளை இந்திய ராணுவம் கைப்பற்றியுள்ளதாகச் செய்திகள் வந்துள்ளன**

**இதுவரை 48 பாகிஸ்தான் விமானங்களை சுட்டுவீழ்த்திவிட்டதாக இந்தியா அறிவித்துள்ளது**



கிழக்குப் பாகிஸ்தானின் டாக்கா நகரை நோக்கி இந்தியப் படைகள் முன்னேறிக் கொண்டிருப்பதாக கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறின. டாக்காவில் பாகிஸ்தான் விமானப்படை முற்றாகவே முடமாக்கப்பட்டுவிட்டதாம்

இருதரப்பினருக்குமிடையில் கடும் டாங்கிச் சண்டை தொடர்கின்றது. லாகூருக்கு மேற்கே 11 இந்திய டாங்கிகளை நிர்மூலமாக்கிவிட்டதாக பாகிஸ்தானியர் கூறுகிறார்கள்.

சிந்துப்பகுதியில் 5 நகரங்கள் தம்வசம் வீழ்ச்சியுற்றுள்ளதாக இந்தியர் கூறுகின்றனர்

கிழக்கில் சிட்டகாங் துறைமுகத்துக்குப் போகும் முக்கிய நகரம் ஒன்று இந்தியர் வசம் வீழ்ச்சியடைந்துள்ளதாம்

கிழக்கில் மேற்குப் பாகிஸ்தான் படைகளுக்கு வாபஸ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன. பாகிஸ்தான் படையினர் திக்குமுக்காடும் நிலையில் இருக்கிறார்களாம். பலர் பின்வாங்கி ஓடுவதாகவும் கூறப்படுகின்றது. மேற்குப் பாகிஸ்தான் படைகளுக்கு இருந்துவந்த தொடர்புகள் அனைத்தையுமே விடுதலைப்படையினர் துண்டித்துவிட்டார்களாம்.

வங்காள தேசத்தை இந்தியா அங்கீகரித்துவிட்டதாகப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி இந்திய ஆட்சிமன்றத்தின் இருசபைகளிலும் அறிவித்தார். இரு சபைகளிலும் அங்கத்தவர்கள் இச்செய்தியைப் பெரும் ஆரவார கைகொலியுடன் வரவேற்றனர்.

வங்காளதேச மக்கள் குடியரசு 'கண பிரஜா தந்திரி பங்களா தேஷ்' என்று அழைக்கப்படுமென பிரதம மந்திரி கூறினார்

"இந்தச்சபையத்தில் வங்காளதேசப் பிரதானமான ஷேக் முஜிபுர் ரஹ்மானிடத்தில்தான் நம் எல்லோரது உள்ளங்களும் செல்கின்றன" என்று திருமதி காந்தி லோகசபையில் கூறினார்

வங்காள தேசத்தை இந்தியா அங்கீகரித்த விஷயம் அந்நாட்டின் மாண்புமிக்கப் பதில் ஜனாதிபதிக்கும் பிரதம மந்திரிக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகப் பிரதம மந்திரி தெரிவித்தார்

[5-ம் பக்கம் பார்க்க]

## இலங்கையின் நிலை என்ன?

**ஜே ஆர்: கேட்கிறார்**

கொழும்பு, திங்கள்

இந்திய பாகிஸ்தான் பிரச்சினையில் இலங்கையின் கொள்கை என்ன என்பது பற்றி பிரதமர் அறிக்கை ஒன்று விடவேண்டும் என்று இன்று ஆட்சிமன்றத்தில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா கேட்டுக்கொண்டார். இந்நேரத்தில் பிரதமர் அங்கு இல்லாததினால், ஆட்சிமன்றவிவகார அமைச்சர் இவ்விஷயத்தை பிரதமரின் கவனத்திற்குக் கொண்டுவருவதாகக் கூறினார்.

(பி ஏ)

## இந்தியாவுடனான ராஜீய உறவை பாக் முறித்தது

கராச்சி, டிசம்பர் 6

பாகிஸ்தான் இந்தியாவுடனான ராஜீய உறவுகளை முறித்துக் கொண்டது.

இத்தகவலை பாகிஸ்தான் வானொலி இன்று தனது விசேஷ செய்தி ஒலிபரப்பில் அறிவித்துள்ளது. வங்காளதேசை ஒரு சுதந்திரக் குடியரசாக இந்தியா அங்கீகரித்ததையே இம் முடிவுக்குக் காரணமென அந்த வானொலி மேலும் தெரிவித்தது.

இந்த ராஜீய உறவு முறிப்பு பற்றி உத்தியோக பூர்வமாக எவ்வித அறிவித்தலும் இந்தியாவுக்கு இதுவரை கிடைக்கவில்லை என்றும் இது பற்றி கருத்துத் தெரிவிக்க இந்திய அதிகாரி மறுத்துவிட்டார்.

### நேபாம் குண்டுவீச்சு

பாகிஸ்தான் விமானம் ஒன்று ஜம்முவுக்கு அருகே நேபாம் குண்டொன்றை வீசியது. இந்தியாவின் வடக்கு மேற்கு [illegible] துள்ள 7 விமான தளங்களை பாகிஸ்தான் விமானங்கள் இன்று கடுமையாகத் தாக்கின. 93 மைல்கள் வரை இந்தியப்பகுதிக்குள் பாகிஸ்தான் துருப்புக்கள் ஊடுருவியுள்ளதாக பாகிஸ்தான் தரப்பில் தெரிவிக்கப்பட்டது

காஷ்மீர் பள்ளத்தாக்குகளில் பாகிஸ்தான் விமானங்கள் குண்டுமாரி பொழிந்தன. இந்தியாவின் ஆதாம்பூர், பதான்கோட், பஞ்சூர் ஆகிய [illegible] பாகிஸ்தான்

[6-ம் பக்கம் பார்க்க]

## டாக்காவைநோக்கி ஐந்து முனைகளில் இந்தியப் படை

கிழக்கு வங்காளத்திலும் வடமேற்கு இந்தியாவிலும் தரையிலும் வானத்திலும் கடும் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கிழக்கு வங்காளத்தின் தலைநகரான டாக்காவை இந்தியப்படைகள் 5 பக்கங்களிலிருந்து தாக்கிவருவதாகவும் ஜெஸ்ஸூர் நகருக்கு 5 கிலோ மீற்றர் தொலைவில் இந்தியப் படைகள் முன்னேறியிருப்பதாகவும் இந்தியத்தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. கிழக்கு வங்காளத்தில் 6 நகரங்களையும் சலோரா புகையிரத நிலையத்தையும் இந்தியப்படைகள் கைப்பற்றி இருப்பதோடு அமேதிகாஞ்சுக்கு அருகே இந்திய கடற்படை

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜேர்மனியில் பயிற்றப்பட்ட மெசினிய வாளர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராஜா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3790

M. G. M. குரக்கன்மா, கடலைமா, ஆட்டாமா, உழுந்துமா, கோப்பித்தூள், மஞ்சள்தூள் ஆகியவை எம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். குறிப்பு- வியாபாரிகளுக்கு விஷேச சலுகை உண்டு. மூகதி இரைண்டிமில்ஸ், 443, கே.கே.எஸ்.ரோட் யாழ்ப்பாணம். 3754

### வைத்தியம்

வாதம், இரத்தி, தொய்வு ஆகிய வியாதிகளை முற்றாகக் குணப்படுத்த வைத்தியத் திறமை பெற்ற டாக்டர் எஸ். வல்லிபுரம் (D. A. M.) தங்க பாஸ்கரன் வைத்திய சாலை, இராசாவிதி, நல்லூர் மார்க்கெட், யாழ்ப்பாணம். 3748

### விற்பனைக்கு


ராதா மணிமார்க் சந்தன தைலம் கூந்தலை நீளமாகவும், அடர்த்தியாகவும் பளபளப்பாகவும் வளரச் செய்யும். மூளைக்கும் குளிர்ச்சியையும், உற்சாகத்தையும் கொடுக்கும். ஆயுள்வேத மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, யாழ்ப்பாணம் கொழும்பு. 3789

நாவற்குழி - வீடுகட்டுவதற்கேற்ற நான்கு பரப்பு விஸ்தீரணமான ஐந்து காணிகள். நல்ல தண்ணீர். மின்சாரம், போக்குவரத்து வசதிகள் உள. பெரியகடையிலிருந்து மைல் இருபதைந்து சதம். ஏற்கனவே முப்பது காணிகள் விற்பனையாகிவிட்டன. நேரில் மனுச்செய்க. லாண்ட் இன்வெஸ்மென்ட், 6, பிரதானவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7453 3793

RAJAH - Jaffna
Daily 10-30 a. m. 4-15, 7 & 9-45 p. m.
BANCO FOR A GOLD KILLER
(Eastman Color)

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சரோஜாதேவி நாகேஷ்-விஜயநிர்மலா நடித்த
**பணமா? பாசமா?**

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி: 2-30, 6-30, 10-00 சனி, ஞாயிறு: 10-30
எம். ஜி. ஆர். ஜெயலலிதா முத்துராமன் விஜயநிர்மலா அசோகன் நடித்த



**என் அண்ணன்**

லிடோ [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் வாணிஸ்ரீ சாவித்திரி அசோகன் நாகேஷ் சுந்தரராஜன் நடித்த



**மனசாட்சி**

## நூற்றுண்டு விழா

காரதீவு. திங்கள் காரைவற்றுறைப் புனித அந்தோனியார் கல்லூரியின் நூற்றாண்டு நிறைவுவிழா அடுத்த ஆண்டு முற்பகுதியில் கொண்டாடப்படவிருக்கிறது. இதற்கான முடிவு பாடசாலை ஆசிரியர்களடங்கிய கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

யாழ். தியேட்டர் (காங்கேசன்துறை)
தினசரி 6-15, 9-30 சனி - ஞாயிறு 2-30
சிவாஜி - ஜெயலலிதா நடித்த
**எங்கிருந்தோ வந்தாள்**

2-வது வாரம்
வெலிங்டன் சினிமா (மானிப்பாய்)
தினசரி 6-30, 10-00 சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
**எங்கவீட்டுப் பிள்ளை**
[புதிய கொப்பி]

சாந்தி சினிமா (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30 ஞாயிறு பி. ப. 2-30
முத்துராமன் - ராஜ்ஸ்ரீ நடித்த
**ரமா விஜயம்**

ஸ்ரீ காலிங்கன் இணுவில்
தினசரி 6-30, இரவு 9-30 சனி, ஞாயிறு பி.ப.2-30
ஜெமினி-கே.ஆர். விஜயா மாஸ்டர் பிரபாகர் நடித்த
**ராமு**

MANOHARA (Jaffna)
தினசரி பி ப 6-30 இரவு 10-00 மணி
சரோஜி - விஜயா நடித்த
**கறுப்புப் பணம்**

Daily: 10-30 a. m, 3-45 pm
IT IS A MAD, MAD, MAD WORLD

REGAL Jaffna
Daily 2-30 a. m. 5-00, & 7-15 p.m. 9-45
Jean Gabin
Alain Delon
in
THE SICILIAN CLAN
(Cinemascope - color)

நாகம்ஸ் சினிமா கன்னாகம்
தினசரி மாலை 4-30 சனி, ஞாயிறு 10-30
SIEGE OF THE SAXONS
தினசரி, 6-30, 9-45 சனி, ஞாயிறு 2-30
**நான் கண்ட சொர்க்கம்**

கிளிநொச்சிப் பட்டணசபை

## கேள்வி விளம்பரம்

கீழ்க்காணும்வேலைகளுக்கு கிளிநொச்சிப் பட்டண சபைத்தலைவரால் 22-12-71 முற்பகல் 10-00 மணி வரைக்கும் சீல்வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.


கேள்விகள் இவ்வலுவலகத்தில் வழங்கப்படும் பத்திரங்களில் முறைப்படி நிரப்பப்பட்டு அனுப்பப்பட வேண்டும்.

ஏனைய விபரங்கள் இவ் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

### வேலைகள் விபரம்

1. கிளிநொச்சிச் சந்தையில் மூன்று இறைச்சிக் கடைகள் கட்டுதல்.
2. பரந்தன் சந்தை வடிகால் கட்டுதல்.
3. திருநகர் ஜெயந்தி நகர் வீதி திருத்தவேலை.

ச. சு. முருகேசு
தலைவர், பட்டணசபை, கிளிநொச்சி,
பட்டணசபை அலுவலகம், கிளிநொச்சி
3-12-71. 3200



### சமாதான நீதிபதியாக நியமனம்

யாழ்ப்பாணம், செவ் மானிப்பாய் சங்குவேலியைச் சேர்ந்த திரு. கார்த்திகேசு கந்தசாமி சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாகசேவையைச் சேர்ந்த திரு. கந்தசாமி நாட்டின் பல்வேறு கச்சேரிகளில் 37 வருடங்கள் சேவையின்பின் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் காரியாலய உதவியாளராகவும் உதவி பிஸ்காலாகவும் உதவிச் சுங்கச் சேகரிப்பாளராகவும் மேலதிக பிறப்பு பதிவாளராகவும் மேலதிக உதவி மறியல்சாலை அதிபராகவும் சேவையாற்றி சமீபத்தில் இளைப்பாறியுள்ளார். திறமையாகவும் கண்ணியமாகவும் நேர்மையாகவும் தனது அரச கடமைகளை யாற்றியதால் பல அரசாங்க அதிபர்களினதும், உயர்நீதி மன்ற நீதிபதிகளினதும் விசேட பாராட்டுதல்களை இவர் பெற்றுர்.

இவர் தற்சமயம் யாழ்ப்பாணப் பிராந்திய இலங்கைத் தேசிய சுழகத்தின் கயரோக தடுப்பு இயக்கத்தின் பொருளாளராகக் கடமை யாற்றி வருகின்றுர்.

## கேள்வி விளம்பரம்

பட்டினசபை மானிப்பாய்

1972-ம் ஆண்டிற்குப்பின் வருவனவற்றிற்கு ஒப்பந்தக்காரரிடமிருந்து 17-12-71 வெள்ளிக்கிழமை பகல் 12-00 மணிவரை இருபிரதிகளுடன் கூடிய அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

தனித்தனியாக கேள்விப் பத்திரப்பணம் ரூபா 5/- கேள்விப் பிணைப்பணம் ரூபா 25/- செலுத்தி பின்னப் பத்திரங்களை காரியாலயத்தில்பெற்றே கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரப் பணம் திருப்பி கொடுக்கப்பட மாட்டாது. கேள்விப் பத்திரங்கள் 16-12-71 வியாழக்கிழமை பகல் 12-00 மணிவரை வழங்கப்படும். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். எந்த அல்லது எல்லா கேள்விகளையும் ஏற்கவோ நிராகரிக்கவோ தலைவருக்கு விசேட அதிகாரமுண்டு.

(1) மத்தியசந்தை, ஆட்டிறைச்சிக்கடை, குத்தகைக்கு வழங்குதல்.
(2) பாடசாலை ஒழுங்கை திருத்தவேலைக்கான கேள்விகள். இவ் வேலைக்கான கேள்விகள் சபையில் பதிவு செய்யப்பட்ட அல்லது அரசாங்க ஒப்பந்தக்காரரிடமிருந்தே ஏற்றுக் கொள்ளப் படும்.
(3) பின்வரும் உபகரணங்கள் விநியோகம் செய்தல்.
காகிதாதிகள், மின் உபகரணங்கள், மின் கம்பத்துக்கு கொங்கிறீற்றுாண்கள், பனைத்தூண்கள், கற்கள், சல்லி, கிறசர்டஸ்ட், மணல், கல்லி,

சி. இராசேந்திரம் ஜே.பி,
தலைவர்
பட்டினசபை, மானிப்பாய்
பட்டினசபைக்காரியாலயம் மானிப்பாய்
3-12-71 3199

## இறைச்சிக்கடைகள் கேள்வி விளம்பரம்

கிளிநொச்சிப் பட்டணசபை

கிளிநொச்சிச் சந்தையில் மாட்டிறைச்சிக் கடைகள் மூன்றும், ஆட்டிறைச்சிக்கடைகள் இரண்டும், பன்றி இறைச்சிக்கடை ஒன்றும், பரந்தன் சந்தையில் ஆட்டிறைச்சிக்கடை ஒன்றும், மாட்டிறைச்சிக்கடை ஒன்றும் அமைந்து 1-1-1972 தொடக்கம் 31-12-1972 வரை குத்தகையாக எடுத்துக் கட்டுப்பாட்டு விலைகளுக்கு இறைச்சி விற்பனை செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 1971-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ம் திகதி முற்பகல் 10-00 மணிவரைக்கும் இவ் அலுவலகத்தில் வழங்கப்படும் பத்திரத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பிணைப்பணம் மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சிக் கடைகளுக்கு ரூபா. 50/-, பன்றியிறைச்சிக்கடைக்கு ரூபா. 25/-ம், பத்திரப்பணம் ரூபா. 5/-ம், (இப்பணம் திருப்பிக் கொடுபடமாட்டாது) செலுத்தி 22-12-71-ந் திகதி முற்பகல் 10-00 மணிவரைக்கும் இச்சபை அலுவலகத்தில் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

### கட்டுப்பாட்டு விலைகள்

| | |
|---|---|
| ஆட்டிறைச்சி எலும்பில்லாமல் ஒரு றாத். | ரூ. 3-75 |
| ஆட்டிறைச்சி எலும்புடன் ,, ,, | ரூ. 3-25 |
| மாட்டிறைச்சி எலும்பில்லாமல் ,, ,, | ரூ. 1-30 |
| மாட்டிறைச்சி எலும்புடன் ,, ,, | ரூ. 1-00 |

மற்றும் விபரங்கள் இப்பட்டண சபை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

ச. சு. முருகேசு,
தலைவர்,
பட்டணசபை, கிளிநொச்சி.
பட்டணசபை அலுவலகம்,
கிளிநொச்சி, 2-12-71.
2689

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
★ சிவாஜி ★ சாவித்திரி ★ நம்பியார் நடித்த
**பிராப்தம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கு அரங்கில்: ராஜஸ்தான் பாலைவனத்தில் பாக். படைகள் கஷ்டம்

## கிழக்கு அரங்கில்: கொமில்லாவை நோக்கி விடுதலைப்படை முன்னேற்றம்

புதுடில்லி, டிசம்பர் 6

ராஜஸ்தான் பாலைவனப்பகுதியில் புகுந்து தாக்குதல் நடத்திய பாகிஸ்தான் படைகளின் ஒரு பகுதி பாலைவனத்தில் சிக்கியிருப்பதாகக் கூறப்படுகிறது

கிழக்கு அரங்கில் இந்தியப்படைகள் தம் நிலைகளை மேலும் ஸ்திரப்படுத்தியிருப்பதுடன் விடுதலைப்படைகளுடன் சேர்ந்து பல அரங்குகளிலும் முன்னேறிவருகின்றன

சிட்டகாங் துறைமுகத்துக்கு நடுநிலைமைக் கப்பல்கள் எதையும் போக வேண்டாமென்று இந்தியா எச்சரித்துள்ளது

## சிந்து பகுதியில் வெகுதூரம் பாய்ச்சல்

நேற்று பாகிஸ்தானில் சிந்து பகுதியில் நுழைந்த இந்திய தரைப்படையினர் அங்கு வெகுதூரம் வரை ஊடுருவிப் பாய்ந்துள்ளனராம். அப்பகுதியில் காத்திரா நகரம் உட்பட மூன்று நகரங்களைக் கைப்பற்றியுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

### இரவும் பகலும் தாக்கினர்

இந்திய விமானங்கள் நேற்று பகலிலும் இரவு நேரத்திலும் பாகிஸ்தான் ராணுவ நிலைகள்மீது குண்டு வீசித் தாக்குதல் நடத்தின. லாகூர், சர்கோதா விமான நிலையங்கள்மீது அவை குண்டுகளை வீசின. ஒரு தடவை தளத்திலிருந்த 9 பாகிஸ்தான் விமானங்களை நிர்மூலமாக்கிவிட்டதாகவும் இந்திய தரப்பில் கூறப்பட்டது.

பாகிஸ்தானியர் 47 விமானங்களை இழந்துள்ளனர் என்றும் இவைகளில் 5 மிராஜ் சண்டை விமானங்கள் என்றும் கூறப்பட்டது.

### நிருபர்கள் பார்த்தனர்

மேற்கு அரங்கில் இந்திய பிரங்கிப் படையினர் செயல்படுவதை வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர்கள் பலர் பார்த்தனர். பாகிஸ்தான் விமானம் ஒன்று சுட்டுவீழ்த்தப்படுவதை பிபிஸீடிவ் நிருபர் ஒருவர் டெலிவிஷன் படம் எடுத்துள்ளாராம்.

### காஷ்மீரத்தில் சண்டை

காஷ்மீர்ப் பகுதியில் நேற்று முன்னேறிய பாகிஸ்தான் படைகளை தடுத்துவிட்டதாக இந்திய அதிகாரிகள் அறிவித்துள்ளனர். காஷ்மீரில் நடைமுறையிலிருந்த போர் நிறுத்த எல்லைக்கோடு இனிமேல் புறக்கணிக்கப்படும் என்றும், பாகிஸ்தான் இந்த எல்லைக் கோட்டை மீறி தாக்குதல் நடத்தியதால் இப்படி முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் இந்திய அதிகாரிகள் கூறினார்கள்: பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர் பகுதி இந்தியாவின் சட்டபூர்வமான ஒரு பகுதியாகவே கருதப்பட்டு வந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

### சிவில் விமானத் தளங்கள்

இந்திய சிவில் விமானத் தளங்கள் மீதும் பாகிஸ்தான் விமானங்கள் குண்டு வீசித் தாக்கியிருப்பதாகக் கூறிய இந்திய அதிகாரிகள் இனி ஒருதடவை பாகிஸ்தானியர் இப்படி செய்தால் இந்திய விமானப் படைகளுக்கு விடுக்கப்பட்டுள்ள உத்தரவுகள் மாற்றப்படும் என்று அறிவித்தனர்.

கராச்சி துறைமுகத்தில் இந்திய கடற்படை நடத்திய தாக்குதல் காரணமாக பாகிஸ்தானியருக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது. கராச்சித் துறைமுகத்தில் தாக்குதல் நடத்திய இந்திய கடற்படைக்கு ஆதரவாக இந்திய விமானப்படை கராச்சியைச் சுற்றியுள்ள விமானத்தளங்கள் மீது தாக்குதல் நடத்தியமைக்காக மேலதிகாரிகள் பாராட்டுத் தெரிவித்தார்கள்.

இந்தியாவின் ராஜஸ்தான் பகுதியில் புகுந்த சிலஇடங்களில் பெருந் தாக்குதல்களை மேற்கொண்ட பாகிஸ்தான் தரைப்படைகளைத் துரத்தியடித்துவிட்டதாக இந்திய அதிகாரிகள் இன்று காலையில் கூறினார்கள்.

லோகிணவாலா என்ற பகுதியில் மிக வேகமாகத் தாக்குதலை ஆரம்பித்த பாகிஸ்தான் தரைப்படை பலத்த சேதத்துடன் திரும்ப நேர்ந்ததாக அவர்கள் தெரிவித்தனர். இங்கு பாகிஸ்தானியரின் 33 தாங்கிகளை நிர்மூலமாக்கியதாக தெரிவித்த இந்திய அதிகாரிகள் 14 சீன தாங்கிகளையும் நொறுக்கிவிட்டதாக கூறினார்கள். சீன தாங்கிகள் எரிந்து கொண்டிருப் பதை தூரத்திலிருந்து பார்க்கும் போது தெரிந்ததாம்.

ராஜஸ்தான் பகுதியில் முன்னேறிவந்த பாகிஸ்தான் படைகள் இந்தியரின் மூர்க்கமான எதிரடிகளினால் சிதறிப் போயுள்ளார்கள் என்றும் பெரும்பகுதியினர் ராஜஸ்தான் பாலைவனத்தில் சிக்கியுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. இங்கு சிக்கியுள்ள பாகிஸ்தான் படையினர் திரும்பிச் செல்வது பெரும் சங்கடமாகவிருக்கும் என்று கூறப்படுகின்றது.

## கிழக்கு அரங்கில் யுத்த நிலைமை

கிழக்கு பாகிஸ்தானில் யுத்த நிலைமை இந்திய படைகளுக்கு பெருமளவில் சாதகமாகத் திரும்பியிருப்பதாகக் கூறப்படுகின்றது

கிழக்குப் பாகிஸ்தானில் குமிலாவை நோக்கி சுமார் 48 கிலோ மீட்டர் தொலைவில் விடுதலைப் படையினர் முன்னேறிக் கொண்டிருக்கிறார்களாம். அனேகமாக எல்லா அரங்குகளிலும் இந்திய படைகள் இங்கு முன்னேறி வருவதாகக் கூறப்படுகின்றது.

இங்கு பாகிஸ்தான் படையினர் பல இடங்களிலும் தம் நிலைகளின் உறுதிப்பாட்டை இழந்துள்ளதை ஒப்புக் கொண்டுள்ளனர். பாகிஸ்தான் விமானப்படை இங்கு முற்றாக செயல் இழந்துள்ளதாக கூறப்படுகின்றது. குருமிடோலா என்ற விமானத் தளத்தை இந்திய விமானப்படை முடமாக்கிவிட்டதாக தெரிவித்தனர். முன்னேறும் இந்தியப் படைகளுக்கும், விடுதலைப் படையினருக்கும் இந்திய விமானப்படையினர் பெரும் அளவில் ஆதரவாக செயல்பட்டு வருகின்றனராம். ரங்பூர் அரங்கில் பிரபல்யமான குருமிட்டோலா விமான நிலையத்தின் ஓடுதரையில் 1000 றாத்தல் எடையுள்ள குண்டு வீசப்பட்டு அங்கு பெரும் குழியொன்று உருவாக்கப்பட்டுவிட்டதாம்.

இங்கு இருதடவைகள் மாத்திரமே பாகிஸ்தான் பறந்து செயல்பட்டனவாம். ஆனால் இந்திய விமானங்கள் 230 தடவைகள் பறந்ததாகக் கூறப்பட்டது. 47 பாகிஸ்தான் விமானங்கள் நொறுக்கப்பட்டு விட்டதாக இந்தியர் கூறுகின்றனர். 61 இந்திய விமானங்களை நாசம் செய்து விட்டதாக பாகிஸ்தானியர் கூறுகின்றனர்.

மைமன்சிங் அரங்கில் ராஜேந்திரகஞ் பகுதியில் 90 ரோஸ்டாக்களை இந்தியர் துவம்சம் செய்தார்களாம்.

### நடுநிலைமைக் கப்பல்களுக்கு எச்சரிக்கை

சிட்டகாங் துறைமுகத்துக்கு செல்லும் நடுநிலைமை நாடுகளின் கப்பல்களை அங்கு செல்லவேண்டாமென்று இந்தியா எச்சரித்துள்ளது. இந்த நிலைமை பாதுகாப்பாக இல்லையென்றும் இன்று வரைக்கும் இந்த நடுநிலைக் கப்பல்களுக்கு அவகாசம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிட்டகாங் துறைமுகப்பகுதியில் 5 பாகிஸ்தான் கப்பல்களை இந்திய விமானங்கள் சேதப்படுத்தியுள்ளனவாம். டாக்காவிலுள்ள ஐ.நா. மற்றும்சர்வதேசப்பிரமுகர்களை அப்புறப்படுத்துவதற்கு வசதியாக இன்று இரண்டுமணி நேரம் அங்குதாக்குதல்எதையும் மேற்கொள்ளவேண்டாமென ஐ.நா. பொதுச்செயலாளர் யுதாண்ட் இந்தியாவைக் கேட்டிருக்கிறார்.

அமெரிக்க வர்த்தகக் கப்பல்கள் இரண்டு தாக்கப்பட்டுள்ளதாக ஒரு செய்தி கூறுகின்றது.

## சீன - சோவியத் தீர்மானங்கள்

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையிலான சண்டைநிலைமை பற்றி ஐ. நா. பாதுகாப்புசபை இன்றுமீண்டும் அவசரமாகக்கூடிஆலோசிக்க ஆரம்பித்தது.

பாகிஸ்தான் இந்தியபோர் சம்பந்தமாக பலதீர்மானங்கள் சபையின்முன் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இதில் சோவியத்நாடு சமர்ப்பித்துள்ள தீர்மானமும் சீன அரசு சமர்ப்பித்துள்ள தீர்மானமும் முக்கியமானவை.

இந்திய உபகண்டத்தில் நிலைமை மோசமானதற்கு பாகிஸ்தான்தான் காரணமென்றும் பாகிஸ்தானியர் போரை நிறுத்தி கிழக்குப் பாகிஸ்தானில் அரசியல் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சோவியத் தீர்மானம் கூறுகின்றது.

இந்தத் தீர்மானத்தை சமர்ப்பித்துப் பேசிய சோவியத் பிரதிநிதி திரு. மாலிக், வங்காளதேசப் பிரதிநிதிகளையும் அழைத்து அவர்களின் கருத்தைக்கேட்கவேண்டும் என சோவியத்யூனியன் ஏற்கனவே வற்புறுத்தியுள்ளதையும் நினைவு படுத்தினார். சீனத் தீர்மானத்தின்மீது பேசிய சீனப்பிரதிநிதி சோவியத்தின் மேற்படி கருத்தை எதிர்த்தார்.

பாகிஸ்தான் மீது இந்தியா ஆக்கிரமிப்பு நடத்துவதற்கு சோவியத் யூனியன்தான் ஊக்கமளித்து வருகின்றது என்று அவர் சொன்னார். போரைநிறுத்தி அமைதியை நிலைநாட்ட வேண்டுமென்று கூறிய அவர் இந்தியாவே ஆக்கிரமிப்பில் ஈடுபட்டிருப்பதாகக் கண்டித்தார்

சீனத் தீர்மானத்தை சோவியத் பிரதிநிதி 'வீட்டோ' செய்யப்போவதாகவும் அறிவித்தார்.

### இந்தியா ஆச்சரியம்

ஐ. நா. வில் அமெரிக்கா மேற்கொண்டுள்ளபோக்குப் பற்றி இந்திய அதிகாரி ஒருவர் ஆச்சரியம் தெரிவித்தார். சோவியத் நிலையை அவர் வரவேற்றார். சீன நிலை எதிர்பார்க்கப்பட்டது தான் என்றார் அந்த உயர் அதிகாரி

## 'அழைப்பு அனுப்பினோம்'

யாழ்ப்பாணம், செவ்.

மரணவீட்டுமுறைசம்பந்தமாக யாழ். மாநகரசபை கமிட்டி அறையில் நடந்த ஆலோசனைகூட்ட மகாநாட்டிற்கு சமசமாஜக் கட்சியினருக்கு அழைப்பு அனுப்பப்பட்டதாகவும் அவர்கள் கலந்து கொள்ளவில்லையென்றும் மகாநாட்டுக்குழு அழைப்பாளர் தெரிவித்தார்.

## 'மரவரிமுறை நீடிக்க வேண்டும்'

மாவிட்டபுரம், செவ்.

மயிலிட்டி வடக்கில் உள்ள கூடுதலான மக்களின் வாழ்க்கைக்கு உதவும் தொழிலாக அமைந்துள்ள கள் இறக்கும் தொழிலை தொடர்ந்து நடாத்த மரவரி முறையை நீடிக்க வேண்டும்'

இவ்வாறு பிரதமரையும் நிதி அமைச்சரையும் கோரும் மகஜர் ஒன்றை மயிலிட்டி வடக்கில் உள்ள 300 பேர் கையெழுத்திட்டு அனுப்பியுள்ளனர்.

இப்பகுதியில் வாழும் சுமார் 400 குடும்பங்களில் 300 குடும்பங்களின் வாழ்க்கையை நடாத்துவதற்கு கள் இறக்கும் தொழில் உதவுகிறது. புதிதாக உருவாகும் தவறணை முறையும் தொழிலைப் பாதிக்கக் கூடியதாக அமையுமாதலால் மரவரி முறையை நீடிக்கவேண்டும் என்று அம்மகஜரில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## 'மனமாற்றத்தினால் ஒழிக்கலாம்'

யாழ்ப்பாணம், செவ்.

"பொருளாதார ஏற்றத் தாழ்வுகளின் அடிப்படையில் சமூகத்தில் தோன்றிய பிரிவுகளே ஈற்றில் சாதிகளாயின. காலகதியில் இச்சாதி அமைப்புகள் சமுதாயத்தின் பல்வேறு அமைப்புகளையும் தாக்கி வலுவான பிரிவுகளையும், பிளவுகளையும் ஏற்படுத்தி விட்டன".

இவ்வாறு அதிரி கம்யூனிஸ்ட் கட்சி வாலிபர்சங்கக் கூட்டத்தின்போது பேசிய திரு. க. கணபதிப்பிள்ளை கூறினார்.

திரு. தெணியான் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தின்போது இவர்மேலும் பேசுகையில், "சாதிக்கொடுமையை மனமாற்றத்தினால்தான்போக்கமுடியும். ஆனால் இதனை ஏற்படுத்துவது இலகுவல்ல", இச்சாதிமுறை சமுதாயத்தில் ஏற்படக்காலாயிருந்த நிலவுடைமைமுறையை மாற்றியமைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

திரு. நைல்ஸ் நன்றி கூறினார்

## வேண்டுகோள்

காரதீவு, திங்கள்

"சைவச்சான்றோர்மலிந்த புங்குடுதீவுக் கிராமத்தில் முதன்முதலாக சித்திரத் தேரை உருவாக்கப் போகின்ற எமது திருப்பணி நிறைவேற சைவத்தமிழ் உலகம் தனது பேருதவியை அளிக்கவேண்டுமென்று வேண்டுகின்றோம்."

மேற்கண்டவாறான வேண்டுகோள் ஒன்றை புங்குடுதீவு மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணியசுவாமி தேவஸ்தான பரிபாலன சபைத் தலைவரான திரு. இ. குலசேகரம்பிள்ளை விடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நாட்டின் பொருளாதாரப் பிரச்னையைத் தீர்க்க வழி'

மாவிட்டபுரம், திங்கள்

இன்று நாட்டில் பெரும் பிரச்னையாக இருக்கும் பொருளாதாரப் பிரச்னைக்கு தீர்வுகாண வேண்டுமானால் தனியார்துறை முழுமையாக ஒழிக்கப்பட வேண்டும். அத்துடன் பெரும் முதலாளிகளிடம் முடங்கிக்கிடக்கும் பணத்தின்மீது வரிகள் விதித்து அப்பணம் நாட்டுக்கு உதவச் செய்ய வேண்டும்.

இவ்வாறு காங்கேசன்துறை சீமெந்துப் பொதுத் தொழிலாளர் யூனியன் வருடாந்தக் கூட்டத்தில் கலந்து உரையாற்றுகையில் கம்யூனிஸ்ட்கட்சி வடபகுதி செயலாளர் திரு வி. பொன்னம்பலம் கூறினார்.

யூனியன் காரியாலயத்துக்கு முன் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் தொழிலாளி விவசாயி சேர்ந்து அமைக்கும் அரசு தான் சோஷலிச அரசு. இன்றுள்ள அரசு சோசலிச அரசு அல்ல. விவசாய தொழிலாள மக்கள் அரசு அமைக்கும்போது தான் உண்மையான சோஷலிசம் நிலைபெறும்.

நம்நாட்டிலுள்ள தொழிலாளர்களின் பிரச்னைகளை அமைச்சர்கள் தீர்க்கமுனைந்தாலும் அரசாங்க அதிகாரிகள் மறுப்பாக நிற்கின்றனர். ஒரு அரசு மாறினால் அமைச்சர்கள் மாறுவார்கள் ஆனால் அரசாங்க அதிகாரிகள் மாறமாட்டார்கள்.

அமெரிக்காவில்ஒரு ஜனாதிபதி மாறினால் அந்த அரசில் உள்ள அதிகாரிகளும் மாற்றப்படுவார்கள். இதனால் நாட்டில் உள்ள பிரச்னைகளை ஆராய்ந்து அதற்கு தீர்வுகாண முடியும். இலங்கையில் காலனித்துவ முறைப்படி அரசாங்கத்தில் சேரும் அதிகாரி பதவிக் காலம் முடிந்தபின் தான் ஓய்வுபெறுகிறார்; அரசு மாறி புதிய அமைச்சர் வந்தாலும்அவர்கள்பிரச்னைகளை ஆராய்ந்து தீர்த்துவைக்க இந்த அதிகாரிகள் தடையாக இருக்கிறார்கள். ஆகவே இதுகுறித்து தொழிற்சங்கங்கள் ஒன்றுபட்டு எதிர்த்துப் போராட வேண்டும்.

நாட்டில் பலாத்கார இயக்கம் தலைதூக்கிய சமயம் அதைஒழிக்க கட்டுஸ்தாபன தொழிலாளிகள் அரசுக்கு ஆதரவு கொடுத்தனர். அரசு தமது உரிமைகளை வழங்கும் என்ற நம்பிக்கையுடன்தான் அரசுக்கு ஆதரவு வழங்குகிறார்கள். ஆதலால் தொழிலாளர்களின் உரிமைகளை வழங்கவேண்டிய பெரும் பொறுப்பு அரசிடம் தங்கியுள்ளது.

# விவேகானந்தசபை பரீட்சை முடிவுகள் இன்றுகிடைக்கும்

கொழும்பு, திங்கள்

சென்ற மாதம் 2ந் திகதி கொழும்பு விவேகானந்த சபையாரால் நடாத்தப்பட்ட அகில இலங்கைச் சைவசமயப் பாடப் பரீட்சையின் பெறுபேறுகள், பரீட்சைக்குத் தோற்றிய சகல பாடசாலைகளுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் 7-12-71 செவ்வாய்க்கிழமை கிடைக்கக் கூடியதாகச் சபையின் பரீட்சைப் பகுதி அனுப்பிவிட்டது. எந்தவொரு பாடசாலைக்கும் மேற்குறித்த நாளன்று பெறுபேறுகள் கிடைக்காவிடின் உடனடியாகச் சபையின் பரீட்சைச் செயலாளருடன் தொடர்பு கொள்ளும்படி அப்பாடசாலைத் தலைவரைக் கொழும்பு விவேகானந்த சபை கேட்டுக்கொள்ளுகிறது.

மேலும் இப்பரீட்சையில் சித்தி எய்தியோர்க்குரிய தகைமைச் சான்றிதழ்களும் பரிசில் பெறுவோரின் பரிசில்களும் வருகிற பெப்ரவரி மாதம் முதற் கிழமைக்குள் அந்தந்தப் பாடசாலைகளுக்கு உரியவர்களிடம் சேர்ப்பித்தற் பொருட்டுச் சபையாரால் அனுப்பிவைப்பார்கள்.

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்- அதிபர் திரு. கே. கிருஷ்ணபிள்ளை, உபதலைவர்கள்- திருவாளர்கள் கே. மாசிலாமணி, ரி. பசுபதி, எம். ஜெகபாலன், இணைக் காரியதரிசிகள்- திருவாளர்கள் ஆசிரியர் பி. கணபதிப்பிள்ளை, வி. தேவதாசன், பொருளாளர்- திரு. ஆர். ரவீந்திரன், கணக்குப் பரிசோதகர்- திரு. எம். ஜெகதீஸ்வரன், நிர்வாகக் குழு- திருவாளர்கள் என். சுருஞானரன், கே. தனபாலசிங்கம், எஸ். சிவராசா, கி. சின்னத்துரை, எம். சின்னத்தம்பி. விளையாட்டுப் பிரிவுக் காரியதரிசிகள்- திருவாளர்கள் எம். ஜெயராஜசிங்கம், வி. பாலசிங்கம்.

0 0 0

வெள்ளவத்தை, திங்கள்

அஞ்சல் தொலைபேசித் தொடர்புச் சேவையாளர் சங்கக் கொழும்பு மாவட்டக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அஞ்சல் தந்தித் திணைக்களத் தலைமைப்பீடத்தில் நடைபெற்றது. 1971-72ம் ஆண்டுக்கான ஆட்சிக்குழு உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.


தலைவர்- திரு. டபிள்யூ. ஜயசிங்க, துணைத் தலைவர்கள்- திரு. எஸ் ஆர் எம் சமரசிங்க, திரு. கே. சபாபதிப்பிள்ளை, செயலாளர்- திரு. எஸ். சிவநாதன், துணைச் செயலாளரும் பொருளாளரும்- திரு. எச். ஜயவீர.

## வேலைவாய்ப்புத் திட்டங்கள்

கல்வியன்காடு செவ்வாய்

இலங்கை முழுவதிலும் உள்ள விவசாயப்பாடசாலைகளில் செய்முறைமூலம் வளம்பெருகும் தொழில்களை இளைஞர்களுக்கும் பொதுமக்களுக்கும் போதித்து வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஓரளவு குறைக்கலாம் என விவசாய இலாகா அதிகாரி தெரிவித்தார்.

விவசாயப்பாடசாலைகள் ஒவ்வொன்றிலும் இளைஞர்களுக்காக ஆரம்பப்பயிற்சியும் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு மேற்கொண்டநிற் பயிற்சியும் வழங்கப்படும். இதில் பெண்களுக்காக தையல், மனையியல், பன்னவேலை போன்றனவும், ஆண்களுக்காக நீர் இறைக்கும் யந்திரங்கள் பழுதுபார்த்தல், கோழி வளர்ப்பு, பாற்பண்ணைத் தொழில், கனிமரங்கள் நாற்றுமேடை, மரத்தொழில் போன்றவற்றையும் கற்பித்து தொழிலை வளமடுத்தவும் உள்ளது. அடுத்த ஆண்டுப் பிரச்சத்தில் இவ்வகுப்புகள் ஆரம்பமாகும்.



## அ. செ. மு. வுக்கு கெளரவம்

யாழ்ப்பாணம், செவ்

ஈழம்பெறும் எழுத்தாளரும் பத்திரிகையாளருமான திரு. அ. செ. முருகானந்தனை (அ செ மு) கலாச்சாரத் திணைக்களத்தின் தமிழ் இலக்கிய ஆலோசனைக் குழு கௌரவிக்கவிருக்கிறது. ஜனவரி 16-ம் திகதி நடக்கும் இலக்கியவிழாவில் தற்கால தமிழ் இலக்கியம் கலை ஆகியவற்றுக்கு மதிப்பார்ந்த சேவையாற்றியதற்காக இந்தக் கௌரவம் அன்றையதினம் வழங்கப்படும்.

அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு அ செ மு சுதந்திரன், வீரகேசரி, ஈழநாடு ஆகிய பத்திரிகைகளில் ஆசிரிய குழுவில் பணியாற்றியிருக்கிறார்.

## இன்றைய பலன்

கார்த்திகை மீ 21-ம் திகதி (7-12-71) செவ்வாய்க்கிழமை

மேஷம்- புண்ணிய காரியங்களில் விருப்பம் மேலிடும். குடும்பத்திலும் பாக்கிய விருத்தியுண்டு. தெய்வத்தின் துணைக்கும் இடமுண்டு.

ரிஷபம்- புதிய தொழில் குறித்து சிந்தனை உருவாகும். கூட்டுவியாபாரத்தால் முன்னேற்றமுண்டு. பண பலமும் உண்டு.

மிதுனம்-பொருள் கைவிட்டுப்போகும். மற்றவர்களிடத்தில் பொல்லாங்கு கேட்க நேரிடலாம். எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.

கடகம்- எண்ணங்கள் ஆயிரம் சிந்தையிலே வந்து உதிக்கும். ஏமாற்றம்தாக்கும். விந்தையானபோக்கு வேடிக்கை காட்டும்.

சிம்மம்- வாழ்க்கைப் பூங்காவில் வசந்தம் நிலவும் சுபகருமங்கள் நடைபெறும் சுற்றமும்சூழும். பொறுமை உணர்ச்சிவேண்டும்.

கன்னி- மேடைப் பேச்சாளர்களும் நடிகர்களும் பெரும் புகழ் அடைவார்கள். பொருள்வரவுக்கும் இடமுண்டு.

துலாம்- அன்னியர்கள் சகவாசம் சங்கடத்தில் மாட்டிவைக்கும். அவசர முடிவின் மூலம் சில துன்பங்கள் விளையலாம்.

விருச்சிகம்- திடீர்திருப்பங்கள் ஏற்படும்; ஆரம்பத்தில் கடினமாகத் தோன்றிய வைகள் இலகுவில் முடிவடையலாம்.

தனுசு- பின்னைப் பாசம் உள்ளத்தில் தலைதூக்கும். சமயோசித நடவடிக்கையின் மூலம் எதையும் வெற்றிகாணமுடியும்.

மகரம்- ஆணவப்போக்கினால் நண்பர்களைப் பகைத்துக்கொள்ளுவீர்கள். மற்றவர்களின் குறுக்குவழித் தலையீடு ஆத்திரத்தை மூட்டலாம்.

கும்பம்- பொன்னான வாழ்வு பெண்ணாலே கிடைக்கும். கன்னியம் கடை... முதல்... தெய்வத்தின் துணை...

# 'பணத்தை விழுங்கும் கல்வியால்பயனில்லை'

சுன்னாகம், திங்கள்

"நாட்டின் பொருளாதாரத்திற்கும் காலத்திற்கேற்றதுமான கல்விமுறையே இன்றைய உடனடித்தேவையாகும். வரிப்பணத்தின் பெரும்பகுதியை விழுங்கும் கல்வி முறையால் நாட்டிற்கு விளைந்திருக்கும் நன்மையென்ன எனப் பொதுமக்கள் கேட்பதில் நியாயமிருக்கிறது. விஞ்ஞான விவசாயக் கல்வியை வளர்க்கும் பதில் இப்பாடசாலைகாட்டும் ஆர்வம் பாராட்டத்தக்கது. விவசாய அறிவுப்போட்டியில் மாணவர்கள் காட்டிய தேர்ச்சி போற்றத்தக்கது."

இவ்வாறு வவுனியா மாவட்ட விவசாய அதிகாரி திரு. வி. சந்திரானந்தன் ஒரந்தை மகாவித்தியாலய விவசாய தினவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

விவசாயக் கல்வி அதிகாரி விழாவிற்கு, தலைமை வகித்தார். அவர் தமது தலைமை உரையில் மேலும் சொன்னதாவது:

விவசாயத்தில் புதிய முறைகளை கையாளுவதற்கான பரிசோதனைகளில் ஈடுபட்டுவரும் பாடசாலை அதிபரையும் விவசாய ஆசிரியரையும் பாராட்டுகின்றேன். நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவுபெற வேண்டும். இதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் அவசியம்.

அதிபர் மு. சொனந்தம் வரவேற்புரை கூறினார். கேடயங்கள், அறிவுநூல்கள் தவிர விசேட பரிசு இனங்களும் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களாக வழங்கப்பட்டன. விவசாய ஆசிரியை செல்வி வி. சந்தையா நன்றி கூறினார்.

# 'முழுக்க முழுக்க அரசை நம்பியிருக்கக்கூடாது'

மட்டுவில் திங்கள்

"விஞ்ஞான அறிவு வளர்ச்சிக்கான விஞ்ஞான ஆய்வு கூடத்தை நிறுவுவதற்கான பணியில் பெற்றோரும் பொதுமக்களும்தான் கம்மாலான முயற்சியில் ஈடுபட்டு நிதி திரட்டி விஞ்ஞான கூடங்களை அமைப்பதற்கான முயற்சியில் ஈடுபடுவது வரவேற்கத்தக்கது"

இவ்வாறு நாவற்குழி மகாவித்தியாலய அதிபர் திரு. சுந்தையா இளைப்பாறியதைத் தொடர்ந்து மேற்படி வித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினால் அளிக்கப்பட்ட சேவை நலன் பாராட்டு விழாவில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு வ. ந. நவரத்தினம் கூறினார். பதில் அதிபர் திரு ஜோசப் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் நாவற்குழி கிராம சபைத் தலைவர் திரு எஸ் சடாட்சரம் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில், இன்றுள்ள நிலையில் எமது எதிர்கால சந்ததியினருக்கு விஞ்ஞானக் கல்வி அவசியம். அதற்கு விஞ்ஞான ஆய்வுகூடம் மிக முக்கியம். ஆனால் அந்த விஞ்ஞானகூடம் அமைக்கும் பொறுப்பை முழுக்க முழுக்க அரசாங்கத்தின் கையையே எதிர்பார்த்திருப்பது புத்திசாலித்தனமாகாது. எமது பெற்றோரும் பொதுமக்களும் கூடியளவு நிதிதிரட்டி சிரமதானமும் செய்து மீதிக்கு அரசாங்கத்தின் கையை எதிர்பார்த்தால் அதுதான் காலாகாலத்தில் நிறைவேறக்கூடியதாக இருக்கும். என்றார்.

சாவகச்சேரி வட்டாரவித்தியாதிகாரி திரு வெ சுந்தசாமி, பண்டிதர் பொன்னுத்துரை, ஆசிரியர் திலைநாதன், உட்படப் பலர் உரை நிகழ்த்தினர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செவ்வாய்க்கிழமை (7-12-71)

(செய்திகள்: காலை 6-30; பகல் 12-45 மாலை 6-00, இரவு 9-00)

294 மீ அலைவரிசை 59 மீ காலை 6-15 நாதாஞ்சலி, 6-20சைவ நற்சிந்தனை, 6-25 இஸ்லாமியநற்சிந்தனை 7-00 விகடவிருந்து'. 7-15 நதிப்பாடல், 7-30 குரல்வளை, 8-00 இசைவேலை, 8-15 இஸ்லாமிய கீதம்.

இரவு 6-10 வாத்தியஇசை 6-15 அகல்விளக்கு. 6-30 இளமினம், 7-00 தமிழ் மூலம் சிங்களம், 7-15 களமும் புலமும், 7-30 வெளிநாட்டுச்செய்திகள், 7-35 மெல்லிசைப் பாடல்கள். 7-45 பேச்சு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி 9-30 கலைக்கோலம், 10-00 நேயர் விருப்பம்

மீனம்- சொற்சிலம்பம் ஆடுவதில் சுற்றவரைச் சொக்கவைப்பீர் சொகுசான நாள் இன்று மிகவும் குஷியாக இருப்பீர்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## மறைவுக்கு அனுதாபம்

ஊர்காவற்றுறை, திங்கள்

"தன்னையே மறந்து தன் சுகபோகத்தைத் துறந்து பிரமச்சரிய விரதம் மேற்கொண்டு தொழிலாளர் நலன் கருதி உழைத்த தலைவர் திரு வெள்ளையனின் மறைவு மலையகத் தொழிலாளர்களுக்கே பேரிழப்பாகும்."

தேசியத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. வி. கே. வெள்ளையனின் அகால மரணத்தை முன்னிட்டுச் சங்கப் பொதுச் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ள அனுதாபச் செய்தியில் ஊரதீவு இளந் தமிழர் மன்றத் தலைவர் திரு. க. மகேந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

## வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், செவ்

பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சிங்கப்பூரில் நிகழ்த்திய சொற்பொழிவுகளின் தொகுப்பு நூல் வெளியீட்டுவிழா இம் மாதம் 13ம் திகதி மாலை 5 மணிக்கு நடைபெறவிருக்கிறது. தெல்லிப் பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் இவ்விழா நடைபெறும்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

